# FIRST INFORMATION REPORT
## முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8029489

1. District : மாவட்டம் அரியலூர் | PS: காவல்நிலையம் ல.ஒ.க.து.பிரிவு அரியலூர் | Year: ஆண்டு 2019 | FIR No.: மு.த.அ. எண் 4/2019 | Date: நாள் 16.07.2019

2. (i) Act சட்டம்: PC Act 1988 as amended
(ii) Act சட்டம்: by PC Act (Amendment)
(iii) Act சட்டம்: 2018 and Cr.P.C.
Sections பிரிவுகள்: 7 of PC Act 1988
Sections பிரிவுகள்: as amended by the
Sections பிரிவுகள்: PC (Amendment) Act
2018 and 102 Cr.P.C.
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் 15.07.2019
Date from : நாள் முதல்
Date to : நாள் வரை
Time Period : நேர அளவு
Time from : நேரம் முதல் 19.00 hrs
Time to : நேரம் வரை 22.30 hrs.
(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 16.07.2019
Time : நேரம் 14.00 hrs
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண்
Time : நேரம் 17.00 hrs.

4. Type of Information : Written/ Oral :
தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக கணினி தட்டச்சில்

5. Place of Occurrence (a) Direction and Distance from PS:
குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் 15 கி.மீ தென்மேற்கு
Beat Number : முறைக் காவல் எண்
(b) Address : முகவரி சார்-பதிவாளர் அலுவலகம், கீழப்பழுவூர், அரியலூர் மாவட்டம்.
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : -
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர்
District : மாவட்டம் -

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் திரு. வெ. கோவிந்தராஜு
(b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் வெட்டாணன்
(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 54|19
(d) Nationality : நாட்டினம் இந்தியன்
(e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : வழங்கப்பட்ட நாள்
Place of Issue : வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : தொழில் கூடுதல் மாவட்ட துணை ஆட்சியர் அலுவலர் / [illegible]
(g) Address : முகவரி மாவட்ட ஆட்சியரகம், அரியலூர் மாவட்டம், அரியலூர்.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

SO: திருமதி. S. வனஜா, உதவியாளர் / சார்-பதிவாளர் பொறுப்பு சார்-பதிவாளர் அலுவலகம், கீழப்பழுவூர், அரியலூர் மாவட்டம் மற்றும் பிறர்.

8. Reasons for delay in reporting by the complainant / Informant.
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

வழியில் தாமதம்.

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

**பணிந்து சமர்பிக்கப்படுகிறது** இன்று 16.07.2019 ஆம் தேதி பகல் 14.00 மணிக்கு அரியலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புபிரிவு காவல் ஆய்வாளர் க.ரமேஷ் குமார் ஆகிய நான் அலுவலகத்தில் பணியில் இருந்த போது திரு.L.கோவிந்தராசு, தற்காலிக மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர்/ துணை வட்டாட்சியர், மாவட்ட ஆட்சியரகம், அரியலூர் மாவட்டம்; அரியலூர் என்பவர் என்முன் ஆஜராகி கொடுத்த புகாரின் விவரம் பின்வருமாறு. அனுப்புதல் L.கோவிந்தராசு, தற்காலிக மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர்/ துணை வட்டாட்சியர், மாவட்ட ஆட்சியரகம், அரியலூர் மாவட்டம், அரியலூர் பெறுதல் காவல் ஆய்வாளர் அவர்கள், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புபிரிவு, அரியலூர். ந.க.எண்.அ1/1752/2016, நாள் 16.07.2019. அய்யா, பொருள் அரியலூர் மாவட்டம், அரியலூர் தாலுக்கா, கீழப்பழுவூர் சார்-பதிவாளர் அலுவலகம் - 15.07.2019 அன்று அரியலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலர்களுடன் திடீர் சோதனை மேற்கொண்டது - மேல்நடவடிக்கை எடுக்க வேண்டி புகார் கொடுத்தல் - தொடர்பாக. பார்வை 1.அரியலூர் மாவட்ட ஆட்சியர் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.அ1/1752/2016 நாள் 15.07.2019, 2.திடீர் சோதனை செயல்முறைகள் நாள் 15.07.2019. அரியலூர் மாவட்ட ஆட்சியர் அவர்களின் பார்வை-1ல் கண்ட உத்தரவின்பேரில் நான் அரியலூர் தற்காலிக மாவட்ட துணை ஆய்வுகுழு அலுவலராக நியமணம் செய்யப்பட்டேன். அரியலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புபிரிவு

(தனித்தாளில் இணைக்கப்பட்டுள்ளது)

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.................—......................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............—........... பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு .............................................. காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும் [illegible]

16.07.2019/12.00 hrs

Name: பெயர் G. RAMESH KUMAR
Rank: நிலை .......................No. எண் ..........
**Inspector of Police,
Vigilance and Anti-Corruption,
Ariyalur,**

* GCP-240-34(Type-2) 90,000 Cps -21.3.16(HCL-12)p 2

**<u>அரியலூார் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண். 4/2019 வழக்கின் முதல் தகவல் அறிக்கையின் தொடர்ச்சி</u>** :-

அலுவலகத்திற்கு கிடைக்கப்பெற்ற தொலைபேசி ரகசிய தகவலின் அடிப்படையில், 15.07.2019 ஆம் தேதி மாலை அரியலூார் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புபிரிவு அலுவலகத்திலிருந்து துணை காவல் கண்காணிப்பாளர், திரு.R.சந்திரசேகர், காவல் ஆய்வாளர் திரு.க.ரமேஷ் குமார் மற்றும் விஜிலென்ஸ் குழுவினருடன் புறப்பட்டு, அரியலூார் மாவட்டம் அரியலூார் தாலுக்கா கீழப்பழுவூர் காவல் நிலையத்திற்கு முன்புறமுள்ள கீழப்பழுவூர் சார்-பதிவாளர் அலுவலகத்திற்கு 15.07.2019 ஆம் தேதி மாலை சென்று திருமதி.S.வனஜா, உதவியாளர்/சார்-பதிவாளர் பொறுப்பு மற்றும் அங்கிருந்தவர்களிடம் என்னையும், காவல் துணை காவல் கண்காணிப்பாளர் மற்றும் விஜிலென்ஸ் குழுவினரையும் அறிமுகம் செய்துகொண்டு, கீழப்பழுவூர் சார்-பதிவாளர் அலுவலகத்தை 15.07.2019 ஆம் தேதி மாலை சுமார் 07.00 மணிமுதல் இரவு சுமார் 10.30 மணிவரை அரியலூார் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு துணை காவல் கண்காணிப்பாளர் திரு.R.சந்திரசேகர் மற்றும் அரியலூார் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புபிரிவு அலுவலர்கள் உதவியுடன் திடீர் ஆய்வு மேற்கொண்டு, சோதனையின்போது கணக்கு கூறஇயலாத மற்றும் கையூட்டு தொகையாக கருதக்கூடிய ரூபாய்.47,300/- கீழப்பழுவூர் சார்-பதிவாளர் அலுவலகத்திலிருந்து கைப்பற்றப்பட்டு, அரியலூார் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புபிரிவு அலுவலக மடிக்கணினி மூலம் திடீர் ஆய்வு செயல்முறைகள் தயார் செய்யப்பட்ட விபரம் பின்வருமாறு. அரியலூார் மாவட்டம், அரியலூார் தாலுக்கா, கீழப்பழுவூர் சார் பதிவாளர் அலுவலகத்தில் பத்திர பதிவுகள் செய்வதற்கு கீழப்பழுவூர் சார்பதிவாளர் அலுவலக அலுவலர்கள் ஆவண எழுத்தர்கள் மற்றும் இடைத்தரகர்கள் மூலமாக பத்திரபதிவு செய்பவர்களிடம் கையூட்டு கேட்டுப் பெறுவதாகவும், இடைத்தரகர்கள் மேற்படி பொது பணியாளர்களுக்காக, பொது மக்களிடம் கையூட்டுப் பெற்று பொது பணியாளர்களுக்கு கொடுப்பதாகவும், அரியலூார் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புபிரிவு அலுவலகத்திற்கு கிடைத்த ரகசிய தகவலின் பேரில் இன்று 15.07.2019 ஆம் தேதி மாலை 7.00 மணிக்கு தற்காலிக மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலராகிய நானும் மேற்படி விஜிலென்ஸ் குழுவினர் சகிதம் கீழப்பழுவூர் சார்-பதிவாளர் அலுவலகத்தில் திடீர் சோதனை மேற்கொள்ளப்பட்டது. மேற்படி அரியலூார் மாவட்டம் கீழப்பழுவூர் சார்பதிவாளர் அலுவலகமானது அரியலூார் தாலுக்கா, கீழப்பழுவூர் to தஞ்சாவூர் செல்லும் மெயின் ரோட்டில் கீழப்பழுவூர் காவல் நிலையத்திற்கு முன்புறம் அமைந்துள்ளது. மேற்படி அலுவலகமானது சுற்றிலும் மதில்சுவருடனும் கிழக்கு பார்த்தவாறு அமைந்துள்ளது, சார்பதிவாளர் அலுவலகத்தின் நுழைவு வாயிலானது இரும்புடன் கூடிய கண்ணாடி கதவு மற்றும் மரக்கதவுகளுடன் கூடியதாகவும், நுழைவு வாயிலுக்கு அடுத்தார்போல் பெரிய ஹாலும், ஹாலின் மையப்பகுதியில் சார் பதிவாளருக்குண்டான தடுப்புடன் கூடிய இருக்கை மற்றும் டேபிளும், சார்பதிவாளர் இருக்கைக்கு எதிர்புறம் திருமதி.ச.பிரேமலதா, தற்காலிக பணியாளர் Data Entry Operator அவர்களுடைய கணினியுடன் கூடிய இருக்கையும், சார்பதிவாளர் இருக்கைக்கு

தென்புறம் திருமதி.S.மகாலெட்சுமி, அலுவலக உதவியாளர் அவர்களுடைய டேபிளும் உள்ளது. மேற்படி ஹாலுக்கு தென்புறம் கணினி அறையும், அதில் கணினி மற்றும் பிரிண்டர்களுடன் கூடிய 9 டேபிள்களும், அதில் தென்மேற்கு மூலையில் உள்ள டேபிள் திரு.S.சதீஷ்குமார், தற்காலிக பணியாளர் IP Camera Operator அவர்களது இருக்கையும் உள்ளது. மேற்படி சார்பதிவாளர் அறையின் தென்மேற்கு மூலையில் மேலே முதல் மாடிக்கு செல்லும் படிக்கட்டுடன் கூடிய வழியும், முதல் மாடியில் ஆவணக் காப்பக அறையும், கழிவறைகளும் உடையதாக, தரைதளம் மற்றும் முதல் தளத்துடன்கூடிய மாடிக்கட்டிடமாக கீழப்பழுவூர் சார்-பதிவாளர் அலுவலகம் அமைந்துள்ளது. திடீர் ஆய்வு குழுவினர் கீழப்பழுவூர் சார்பதிவாளர் அலுவலகத்திற்குள் வந்தபோது திருமதி.S.வனஜா, உதவியாளர்/சார்-பதிவாளர் பொறுப்பு, திருமதி.ச.பிரேமலதா, தற்காலிக பணியாளர் Data Entry Operator, திருமதி.S.மகாலெட்சுமி, அலுவலக உதவியாளர், திரு.S.சதீஷ்குமார், தற்காலிக பணியாளர் IP Camera Operator ஆகியோர் இருந்தனர். சார்பதிவாளர் அலுவலக வாயிலில் நின்றிருந்த திரு.R.பிச்சைரெத்தினம், ஆவண எழுத்தர், த/பெ.ராமசாமி, தெற்குதெரு, கீழகொலத்தூர், அரியலூர், திரு.S.செந்தில்குமார், த/பெ.சடையன், சக்திவினாயகர் கோவில்தெரு, லால்குடி, திருச்சி(முருகன் கம்பியூட்டர் மற்றும் ஜெராக்ஸ் கடை)மற்றும் திருமதி.சுந்தரி, க/பெ.குணசேகரன், காலனிதெரு, கீழப்பழுவூர் ஆகியோர் நின்றிருந்தனர். கீழப்பழுவூர் சார்பதிவாளர் அலுவலகத்திலிருந்த மற்றும் வாசலில் நின்றிருந்த அனைவருக்கும் திடீர் சோதனை செய்யவந்துள்ள நோக்கத்தை தற்காலிக மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலராகிய நான் மற்றும் விஜிலென்ஸ் குழுவினர் தெரிவித்தபோது, மேற்படி இடத்தில் நின்று கொண்டிருந்த சிலநபர்கள் அவரவர்கள் நின்றுகொண்டிருந்த இடத்தைவிட்டு நழுவ முயற்சித்தார்கள். தற்காலிக மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலராகிய நான் அங்கிருந்தவர்களை நிறுத்தி விஜிலென்ஸ் குழுவினர் உதவியுடன் அவர்களை தனித்தனியாக விசாரித்தும் விஜிலென்ஸ் குழுவினர் உதவியுடன் சோதனை மேற்கொண்டபோது கீழ்கண்டவாறு கீழப்பழுவூர் சார்பதிவாளர் அலுவலக தனிநபர் பண இருப்புப்பதிவேட்டின்படி சொந்த பணம் மற்றும் சரியான முகந்திரம் கூற இயலாத பணம் அவரவர் கைப்பை மற்றும் சட்டைப்பையில் வைத்திருந்தது தெரியவந்தது. அதன் விபரம் பின்வருமாறு.

| வ. எண் | பெயர் மற்றும் பதவி | சொந்த பணம்/தனிநபர் பணஇருப்புப் பதிவேட்டின்படி/ திருப்பி கொடுக்கப்பட்ட பணம் | கணக்குகூற இயலாதபணம்/ கைப்பற்றப்பட்ட பணம் |
|---|---|---|---|
| 1 | திருமதி.S.வனஜா, உதவியாளர்/சார்பதிவாளர் பொறுப்பு | 700 | 14,700 |
| 2 | திருமதி.ச.பிரேமலதா, தற்காலிக பணியாளர் Data Entry Operator | 250 | 200 |
| 3 | திருமதி.S.மகாலெட்சுமி, அலுவலக உதவியாளர் | 700 | 200 |

| | | | |
|---|---|---|---|
| 4 | திரு.S.சதீஷ்குமார், தற்காலிக பணியாளர் IP Camera Operator | 470 | 400 |
| 5 | திரு.R.பிச்சைரெத்தினம், ஆவண எழுத்தர், த/பெ.ராமசாமி, தெற்குதெரு, கீழகொலத்தூர், அரியலூர் | 800 | 16,500 |
| 6 | திரு.S.செந்தில்குமார், சக்திவினாயகர் கோவில்தெரு, லால்குடி, திருச்சி | 2,210 | 15,300 |
| 7 | திருமதி.சுந்தரி, க/பெ.குணசேகரன், காலனிதெரு, கீழப்பழுவூர் | 6,100 | - |
| சரியான முகந்திரம் கூற இயலாத மொத்தப் பணம் ரூபாய் | | | 47,300 |

மேற்படி நபர்களிடம் அவர்கள் வைத்திருந்த பணத்திற்குண்டான காரணத்தை கேட்க கீழப்பழுவூர் சார்பதிவாளர் அலுவலக தனிநபர் பண இருப்புப் பதிவேட்டின்படி அவர்களது சொந்த பணம் என்று சரியான முகாந்திரம் தெரிவித்ததால் அவர்களிடம் அந்த பணம் திருப்பிக் கொடுக்கப்பட்டது. ஆனால் மேற்படி நபர்கள் சரியான முகாந்திரம் கூற இயலாத மற்றும் கணக்குகூற இயலாமல் வைத்திருந்த பணம் யாரிடமாவது கையூட்டாக பெற்று வைத்திருந்த பணம் மற்றும் சார்பதிவாளர் அலுவலக ஊழியர்களுக்கு கையூட்டாக கொடுப்பதற்காக வைத்திருந்த பணமாக இருக்கலாம் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் மேற்படி மொத்தப்பணம் ரூபாய்.47,300/-ம் திடீர் சோதனையின் மேல்நடவடிக்கைக்காக கைப்பற்றப்பட்டது. கீழப்பழுவூர் சார்பதிவாளர் அலுவலகத்திலிருந்த வெளி நபர்களான திரு.R.பிச்சைரெத்தினம், ஆவண எழுத்தர், த/பெ.ராமசாமி, தெற்குதெரு, கீழகொலத்தூர், அரியலூர், திரு.S.செந்தில்குமார், த/பெ.சடையன், சக்திவினாயகர் கோவில்தெரு, லால்குடி, திருச்சி மற்றும் திருமதி.சுந்தரி, க/பெ.குணசேகரன், காலனிதெரு, கீழப்பழுவூர் ஆகியோரை தற்காலிக மாவட்ட துணை ஆய்வுகுழு அலுவலர் ஆகிய என்னால் விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது. மேலும், இந்த திடீர் சோதனையின் 1)கீழப்பழுவூர் சார்பதிவாளர் அலுவலக வருகைப் பதிவேடு 2019, 2) கீழப்பழுவூர் சார்பதிவாளர் அலுவலக தற்செயல் விடுப்பு பதிவேடு 2019, 3) 15.07.2019 தேதி கீழப்பழுவூர் சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்ட ஆவணங்களின் விபரம், 4)கீழப்பழுவூர் சார்பதிவாளர் அலுவலக தற்காலிக பணியாளர்களுக்கான வருகைப் பதிவேடு, 5)கீழப்பழுவூர் சார்பதிவாளர் அலுவலக இயக்க பதிவேடு 2019, 6)கீழப்பழுவூர் சார்பதிவாளர் அலுவலக தனிநபர் பண இருப்புப் பதிவேடு 2019, 7)திரு.R.பிச்சைரெத்தினம், ஆவண எழுத்தர் அவர்களுடைய நோட்புக், 8)கீழப்பழுவூர் சார்பதிவாளர் அலுவலக A கணக்கு பதிவேடு Volume No.10 ஆகிய 8 ஆவணங்கள் மேல் நடவடிக்கைக்காக கைப்பற்றப்பட்டது. மேற்படி கீழப்பழுவூர் சார்பதிவாளர் அலுவலக அலுவலர்கள் மற்றும் வெளிநபர்களை விசாரணைக்கு தேவைப்படும் போது ஆஜராகும்படி தற்காலிக மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர் ஆகிய என்னால் அறிவுறுத்தப்பட்டது. இந்த திடீர் சோதனை செயல்முறைகள் இரவு 22.30 மணிக்கு முடிக்கப்பட்டது. மேலும்,

பதிவுத்துறை தலைவர் சென்னை அவர்களின் சுற்றறிக்கை எண். 43029/ஆ3/2011-2, நாள் 11.10.2011-ன்படி சார்பதிவாளர் அலுவலகத்தில் பணிபுரியும் அலுவலர்கள் பணிக்கு வரும்போது தாங்கள் கொண்டுவரும் கையிருப்பு பணத்தை அலுவலகத்தில் உள்ள தனிநபர் பண இருப்பு பதிவேட்டில் பதிவு செய்து பணிசெய்யவேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. அவ்வாறு தனிநபர் பண இருப்பு பதிவேட்டில் குறிப்பிடப்பட்டுள்ள தொகைக்கு அதிகமாக சம்மந்தப்பட்ட அலுவலர்களிடமிருந்தோ, அவர்களது இருக்கையிலிருந்தோ பணம் கைப்பற்றப்பட்டால் அந்த தொகை Illegal gratification (கையூட்டு) எனக் கருதப்படும் எனக்குறிப்பிடப்பட்டுள்ளது. 15.07.2019 ஆம் தேதி கீழப்பழூர் சார்-பதிவாளர் அலுவலகத்தில் திடீர் ஆய்வின்போது கைப்பற்றப்பட்ட மொத்தம் ரூபாய் 47,300/- லஞ்சத் தொகையாக கருதப்படுவதால் அதன்மீது பூர்வாங்க விசாரணை செய்து மேற்படி திருமதி.S.வனஜா, உதவியாளர்/சார்-பதிவாளர் பொறுப்பு, சார்-பதிவாளர் அலுவல்கம், கீழப்பழூர் மற்றும் உள்ளவர்களின்மீது ஊழல் தடுப்பு சட்டத்தின்கீழ் வழக்குபதிவு செய்து நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். இத்துடன் 15.07.2019 ஆம் தேதி தயார் செய்யப்பட்ட திடீர் ஆய்வு செயல்முறைகள் மற்றும் ரெக்கம் ரூபாய் 47,300/- மற்றும் இதர ஆவணங்கள் இணைக்கப்பட்டுள்ளது. தங்கள் உண்மையுள்ள, (ஒப்பம் தமிழில்) லெ.கோவிந்தராசு 16/7/19. (L.கோவிந்தராசு), தற்காலிக மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர், துணை வட்டாட்சியர், அரியலூர் மாவட்ட ஆட்சியரகம், அரியலூர். <u>பணிந்து சமர்பிக்கப்படுகிறது.</u> அய்யா, இன்று 16.07.2019 ஆம் தேதி மாலை 17.00 மணிக்கு மேலே கண்ட புகார் மனு தொடர்பாக சட்டக்கருத்துரை பெற்று அரியலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புபிரிவு குற்ற எண்.04/2019, சட்டப்பிரிவு 7 of the Prevention of Corruption Act, 1988 as amended by the Prevention of Corruption(Amendment) Act 2018 மற்றும் சட்டப்பிரிவு 102 கு.வி.மு.ச.வின்படி வழக்கு பதிவு செய்யப்பட்டது.

(க.ரமேஷ் குமார்), 16.07.2019
காவல் ஆய்வாளர்,
ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு,
அரியலூர்.

இவ்வழக்கின் முதல் தகவல் அறிக்கையின் அசலினை வாதியின் புகார் மனு மற்றும் திடீர் ஆய்வு செயல்முறைகளை இணைத்து, கனம் தலைமை நீதித்துறை நடுவர்/சிறப்பு நீதிபதி, அரியலூர் அவர்களுக்கு அனுப்பியும், இதர நகல்கள் சம்மந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கு அனுப்பியும், நகல் ஒன்று நிலைய கோப்பில் வைக்கப்பட்டது.

(க.ரமேஷ் குமார்), 16.07.2019
காவல் ஆய்வாளர்,
ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு,
அரியலூர்.